சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள்.07.04.2025
OS.No.26/2022
PW2 : கலைசெல்வன் (வயது 60 ) த/பெ. முத்து கருப்பன்
( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

நான் வழக்கின் மூன்றாம் நபர். வாதி தரப்பு 2 ஆம் சாட்சி. எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். படித்து பார்த்து கையொப்பம் செய்துள்ளேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் உண்மையானவை. என்னிடம காட்டப்படும் வா.சா.ஆ.1 அடமான கடன் ஆவணத்தில் நான் எந்த இடத்தில் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் ஆவணத்தில் இன்னாரென்று நிருபித்தவராக 2 வது சாட்சியாகவும், சாட்சி கையொப்பதாரர்களில் 1 வது சாட்சியாகவும் கையொப்பம் செய்துள்ளேன். ஆவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**கு.வி** - வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் மறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

/ signed /
கலைசெல்வன்

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார

sd/-Tmt.R.Mohana.,B.L.,
சார்பு நீதிபதி
இலால்குடி